# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## <u>OS.No.6/2024</u>

PW1–சரவணக்குமார் நாள்.17.03.2026

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1ம் வாதி காசியம்மாள் உயிரோடு இருக்கிறார். 1ம் வாதி நீதிமன்றத்திற்கு வரமுடியுமா என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லை வயதாகிவிட்டது, வரஇயலாது. அவரை சாட்சியாக விசாரிக்கபோவதில்லை. 1ம் பிரதிவாதிக்கு 1968ம் ஆண்டு திருமணம் நடந்ததா என்று எனக்கு தெரியாது. 1976ம் ஆண்டு மேற்படி 1ம் பிரதிவாதி ஒரு சொத்தை கிரயம் வாங்கியுள்ளரா என்று எனக்கு தெரியாது. அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி மாரிமுத்து கிரயம் வாங்கிய கிரயபத்திரத்தின் சொத்துவிவரத்தில் நான்கெல்லையில் இந்த வழக்கு தாவா 1வது அயிட்ட சொத்தை தன்னுடைய சொத்து என்று காட்டியுள்ளவிவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. ஒரு ஏக்கர் 14 செண்ட் அருகில் ஒருஏக்கர் 40 செண்ட் இருக்கும் விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 1976ம் வருடத்திய பத்திரத்தை நான் பார்க்கவில்லை. 1976ம் வருடத்திய பத்திரத்தில் உள்ள வாசகங்கள் மற்றும் சொத்துவிவரத்தில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டால் அது என்னுடைய வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் மேற்படி பத்திரம் பற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1983ம் ஆண்டு பெருமாளுக்கு ஆதரவாக அவருடைய தம்பி மருதை, மற்றும் அவர் மகன் பெரியசாமி பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிகொடுத்தவிவரம் எனக்கு தெரியும். 1968ம் ஆண்டு 1ம் பிரதிவாதிக்கு திருமணம் நடந்த போது அவருடைய தகப்பனார் 1வது அயிட்ட இலக்க சொத்தை அவருக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. செங்கான்முத்திரையர் மகன் பொன்னுசாமி, பொன்னுசாமி மகன் பெருமாள் என்பதும், பெருமாள் மகன் மாரிமுத்து என்பதும், மாரிமுத்து மகன் செல்வராஜ் என்பதும் சரிதான். 1968ம் ஆண்டு முதல் 1வது இலக்கத்தில் மாரிமுத்து சோளம் பயிர் இடுகிறார். கடந்த 27.09.2023ம் தேதி மாரிமுத்து அவர் மகனுக்கு ஒரு பதிவுசெய்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார்.

அந்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்த விவரம் சுமார் 3மாதங்கள் கழித்து எனக்கு தெரியும். அந்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைப்பதற்கு முன்னர் 1968 ம் ஆண்டு முதல் மாரிமுத்து தான் அதில் பயிர் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் 4பேரும் கூட்டாக பயிர் செய்தோம். 1வது இலக்க சொத்தை பயிர் செய்துவந்தோம் என்பதை காட்ட பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் என்கைவசம் இல்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.